RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-43 | 13 பிப்ரவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அதிமுக சின்னம் உள்ளிட்ட விவகாரங்களை தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம்: ஐகோர்ட் தீர்ப்பு

சென்னை, பிப்.13



அதிமுக பொதுச்செயலாளர் பதவி, இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கிய சென்னை உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமியை தேர்ந்தெடுத்தது உள்ளிட்ட அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்கக் கூடாது எனவும், உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை கட்சிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுத்து அனுப்பப்பட்ட மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்க தடை விதிக்க கோரி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்த தடையை நீக்க கோரி முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும், முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத் மற்றும் புகழேந்தி, கே.சி.பழனிச்சாமி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன் மற்றும் ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், தேர்தல் ஆணைய விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையைநீக்கி உத்தரவிட்டனர்.

தேர்தல் ஆணையம், சின்னம் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் விசாரணையை தொடர அனுமதித்த நீதிபதிகள், மனுக்களை விசாரிக்க அதிகாரம் உள்ளதா? என்பது குறித்து திருப்தியடைந்த பிறகே விசாரணையை துவங்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டனர். மேலும், தேர்தல் ஆணைய விசாரணைக்கு தடை விதிக்கக் கோரிய எடப்பாடி பழனிச்சாமியின் மனுவை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள உயர் நீதிமன்ற உத்தரவு, அவருக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

### சிவி சண்முகம் !

அதிமுக முன்னாள் அமைச்சர் சிவி சண்முகம் அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, இல்லாத அதிகாரத்தை இருப்பதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. அதிமுக கட்சி விவகாரத்தை விசாரிக்க தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரமே இல்லை.

தேர்தல் ஆணையத்துக்கு இரண்டு அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயல்பாட்டில் மட்டுமே தேர்தல் ஆணையம் தலையிட முடியும். 29 ஏ பிரிவின் படி ஒரு கட்சியின் சட்ட திருத்தங்களை தேர்தல் ஆணையம் பதிவு செய்ய வேண்டும். 29 ஏ பிரிவு 9ன் படி கட்சி அமைப்பு மாற்றங்களை தேர்தல் ஆணையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

தேர்தல் ஆணையத்துக்கு வெறும் குமாஸ்தா வேலை மட்டும்தான். மனு அளித்தவர்கள் அதிமுகவினரே அல்ல. அதிமுக உறுப்பினர் என்ற போர்வையில் கொடுத்துள்ள மனு போலியானது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் தொடர்ந்த வழக்கில் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது. சூரியமூர்த்தி என்பவர் அதிமுகவில் இல்லை. கட்சிக்கும் அவருக்கும் எந்த தொடர்பும் இல்லை. அதிமுக இருந்து நீக்கப்பட்டவர்களை அழைத்து விளக்கம் கேட்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இது தவறானது என்று கண்டித்துள்ளார்.

## 'மீண்டும் தர்மமே வெல்லும்' அதிமுக உட்கட்சி விவகாரம் குறித்த நீதிமன்ற தீர்ப்புக்கு ஓபிஎஸ் வரவேற்பு

பெரியகுளம், பிப்.13



"அதிமுக உட்கட்சி விவகாரம் குறித்து தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம் என்ற தீர்ப்பை வரவேற்கிறேன். தர்மத்தின் வாழ்வுதன்னை சூது கவ்வும். மீண்டும் தர்மமே வெல்லும்." என்று பெரியகுளத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் பதவி உள்ளிட்ட உட்கட்சி விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்கக்கூடாது என உத்தரவிடக்கோரி முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இருந்தார். இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் அதுதொடர்பான மனுக்களை விசாரிக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு தடை விதித்தது.

இந்த தடையை நீக்கக் கோரி ஓ.பி.ரவீந்திரநாத், வ.புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், எம்.ஜி.ராமச்சந்திரன் மற்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதிகள், அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு விதித்த தடையை நீக்கி தீர்ப்பளித்தனர்.

இதுகுறித்து பெரியகுளத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "அதிமுக உட்கட்சி விவகாரம் குறித்து தேர்தல் ஆணையம் விசாரிக்க முழுஉரிமை உள்ளது என்று உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தோம். நீதிமன்றத்துக்கு என்னென்ன அதிகாரம் உள்ளதோ அதே அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கும் உள்ளது. இதனடிப்படையில் பழனிசாமி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை வரவேற்கிறோம். தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும். மீண்டும் தர்மமே வெல்லும்." என்று அவர் கூறினார்.

## 'தமிழகம் முழுக்க திமுகவுக்கு ஆதரவான சூழலே நிலவுகிறது' அமைச்சர் செந்தில்பாலாஜி நம்பிக்கை

சென்னை, பிப்.13



'தமிழகம் முழுக்க திமுகவுக்கு ஆதரவான சூழலே நிலவுகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்' என அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பகிர்ந்துள்ள பதிவில், "நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல், மக்கள் நலனுக்காக அனுதினமும் உழைத்து வரும் முதல்வரின் உழைப்புக்கும், திராவிட மாடல் அரசுக்கும், பெரியாரை இகழ்ந்து அரசியல் செய்ய நினைத்த அற்ப பதர்களை ஓடவிட்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி!

குரங்கு கையில் சிக்கிய பூமாலையாய் தன் கைக்கு கிடைத்த கட்சியை சீரழித்து சின்னாபின்னமாக்கி தோல்வி மேல் தோல்வி கண்டு 'தோல்விசாமி' இல்லாத பொய்களை வீசுவதே அன்றாட அலுவலாக வைத்திருக்கிறார். அதனால்தான் மக்களை சந்திக்க முடியாமலும் திமுகவை எதிர்க்க துணிவில்லாமல் தேர்தலை சந்திக்காமல் ஓடி ஒளிந்து கொண்டார்.

வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல் வாக்களிக்காத மக்களின் நலனுக்காகவும் இந்த அரசு பாடுபடும் என அறிவித்து செயல்பட்டார் தமிழக முதல்வர். அதன் காரணமாக இன்று ஈரோடு கிழக்கில் அதிமுக வாக்குகள் அனைத்தும் திமுகவுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு முழுக்க திமுகவிற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; "Pro Incumbency" தான் எங்கும் எதிரொலிக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் அலைதான் தமிழ்நாடு முழுக்க அடித்துக் கொண்டிருகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்!." என்று கூறியுள்ளார்.

## சென்னையில் அகத்திய முனிவர் நடைபயணம்' கல்வியை காவிமயமாக்க பாஜக சதி செய்வதாக திமுக குற்றச்சாட்டு

சென்னை, பிப்.13



சென்னையில் அகத்திய முனிவர் நடைபயணம்' என்ற பெயரில் பள்ளி மாணவர்களுக்கு அகத்தியர் வேடமிட்டு நடைபயணம் நடத்தப்பட்டது, தமிழகத்தில் கல்வியை காவி மயமாக்கும் பாஜகவின் சதி' என்று திமுக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தின் மதச்சார்பற்ற தன்மைக்கு நேர் எதிரானது மத்திய பாஜக அரசு முன்வைக்கும் காசியின் ஒற்றை கலாச்சாரம். இப்படியிருக்க "காசி தமிழ்ச் சங்கமம்" என்ற பெயரில் 'காசியுடன் தமிழ்நாட்டுக்கு இருக்கும் கலாச்சாரத் தொடர்பை மீண்டும் கொண்டு வருவோம்' என்ற முழக்கத்துடன் கடந்த 2022 ஆண்டு முதல் ஆண்டு தோறும் பல்வேறு நிகழ்ச்சிகளை பாசிச பாஜக அரசு நடத்தி வருகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டின் கரு பொருளாக 'அகத்திய முனி' என்று வைக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி நேற்று சென்னையில் அகத்திய முனிவர் நடைப்பயணம் என்ற பெயரில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 4 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அகத்தியர் வேடமிட்டு நடைபயணம் நடத்தப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் மதவெறி அரசியலை முன்னிறுத்தி மக்களை பிளவுபடுத்தி, மக்களின் ஒற்றுமையை சிதைத்து வரும் பாஜக தற்போது எதிர்கால தலைமுறையான பள்ளி, கல்லூரி மாணவர்களிடமும் மதவெறி நஞ்சினை விதைக்கத் தொடங்கி இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

இந்திய இந்து கலாச்சாரத்தை பாதுகாக்கிறோம்; தேசிய உணர்வை வளர்கிறோம் என்ற பெயரில் தங்களின் இந்துத்துவ அரசியல் செயல்திட்டத்தை மாணவர்களிடம் பரப்பி அவர்களின் அறிவியல், பகுத்தறிவு சிந்தனையை மழுங்கடிக்கும் வேலையை ஆட்சியில் அமர்ந்த நாள் முதல் மத்திய பாஜக அரசு செய்து வருகிறது. பல்வேறு மாணவர் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் மத்திய பாஜக அரசு தற்போது 'காசி தமிழ்ச் சங்கமம்' என்ற பெயரில் ஆன்மிகத்தின் பெயரால் மாணவர்களிடையே சாதிய, மதவாத உணர்வுகளை விதைக்கும் வஞ்சக செயலில் ஈடுபடத் தொடங்கி இருக்கிறது.

உலக நாடுகள் அனைத்தும் AI (Artificial Intelligence) எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியில் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வரும் நிலையில், இங்குள்ள மத்திய பாஜக அரசு கல்வியில் மதத்தைத் திணிக்கும் பிற்போக்குத் தனத்துக்கு கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து வருகிறது. பகுத்தறிவுக் கொள்கைகளை மாணவர்கள் மத்தியில் விதைத்து சமத்துவ சமுதாயத்தை நிறுவிட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வரும் தமிழகத்தில், கல்வியை காவி மயமாக்கும் பாஜகவின் இத்தகைய சதி திட்டத்துக்கு திமுக மாணவர் அணி கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், அறிவியலுக்கு எதிரான பாஜகவின் மதவாதப் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் தமிழக முதல்வர், துணை முதல்வர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு, திமுக மாணவர் அணி சார்பில் மாணவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்" என்று கூறியுள்ளார்.

## விஜய் கட்சி நிர்வாகிகளுடன் 2வது நாளாக பிரசாந்த் கிஷோர் ஆலோசனை! தவெகவுக்கு வியூகங்கள் வகுக்க ஒப்பந்தம்?

சென்னை, பிப்.13



பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோருடன் தவெக தலைமை நிர்வாகிகள் நேற்று சந்தித்து பேசினர். இதில் தவெகவுக்கு 15 முதல் 20 சதவீத வாக்கு வங்கி இருப்பதாக அளிக்கப்பட்ட அறிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதனிடையே விஜய் கட்சிக்கு தேர்தல் வியூகங்கள் வகுக்க பிரசாந்த் கிஷோர் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் தவெக தலைவர் விஜய்யின் வீட்டில், அவரை பிரசாந்த் கிஷோர் நேற்று முன்தினம் சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து சுமார் இரண்டரை மணி நேரமாக தேர்தல் வியூகங்கள் தொடர்பாக அவர்கள் ஆலோசித்தனர். இதைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவே அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியுடனும் பிரசாந்த் கிஷோர் ஆலோசனையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே, பிரசாந்த் கிஷோரை அதிமுக தரப்பில் அணுகிய நிலையில், அவரே 'யார் அந்த சார்' என்னும் வியூகத்தை முன்வைத்து திமுகவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க ஆலோசனை வழங்கியதாக சொல்லப்பட்டது. அதன் பின்னர் இதேபோல் அவ்வப்போது ஆலோசனைகளை மட்டும் அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என அதிமுக தரப்பில் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே அவர் தவெகவுடன் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து அவர் பழனிசாமியையும் சந்தித்திருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழலில், பிரசாந்த் கிஷோருடன் தவெகவின் தலைமை நிர்வாகிகள் நேற்று மீண்டும் ஆலோசனை நடத்தினர். அதன்படி, கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த், பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, தேர்தல் வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக்கியசாமி ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இதில், தவெகவுக்கு வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் எவ்வளவு வாக்கு சதவீதம் கிடைக்கும் என்பது குறித்து கலந்தாய்வு செய்தனர். அப்போது, அண்மையில் பிரசாந்த் கிஷோர் தரப்பில் எடுக்கப்பட்ட தரவுகளின்படி முக்கிய புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கையை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

அதில் இடம்பெற்ற விவரங்கள்: 15 முதல் 20 சதவீத வாக்குகள் தவெகவுக்கு கிடைக்கும். தமிழகத்தில் தவெகவுக்கு வாக்கு சதவீதம் அதிகமாக இருக்கும் இடங்கள். கட்சிக்கு வாக்களிக்க எந்த வயதினர் தயாராக இருக்கின்றனர். அடுத்து வரும் 11 மாதங்களில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்பன உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு வீட்டுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஆலோசனைகளை அவர் வழங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பிரசாந்த் கிஷோருடனான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அவர் வழங்கிய அறிக்கையை தவெக தலைவர் விஜய்யிடம் பொதுச்செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோர் அளித்திருக்கின்றனர். இதன் அடிப்படையில் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என கட்சி நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

**குழந்தைகள் அணி:** இதற்கிடையே, தவெகவின் அணிகள் தொடர்பான அறிவிப்பும் நேற்றைய தினம் வெளியானது. அதில் கூறியிருப்பதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பு அணிகளாக 28 அணிகள் உருவாக்கப்படுகின்றன. அதன்படி, மூன்றாம் பாலினத்தவர், காலநிலை மாற்றம், தகவல் சரிபார்ப்பு, இளைஞர் அணி, குழந்தைகள் அணி, மாற்றுத்திறனாளிகள் அணி, பெண்கள் அணி, இளம்பெண்கள் அணி, ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் அணி, உறுப்பினர் சேர்க்கை அணி, அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் உள்ளிட்ட அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்த அணிகளின் பொறுப்பாளர்களுடைய பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பாலியல் வன்கொடுமைகள்: திமுக அரசைக் கண்டித்து பிப்.18ல் அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, பிப்.13

"பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்தத் தவறிய திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்து அதிமுக மாணவர் அணி சார்பில், பிப்.18ம் தேதி, சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்," என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் திமுக ஸ்டாலின் மாடல் அரசு பதவியேற்றதில் இருந்து, பள்ளி, கல்லூரி மாணவிகள், சிறுமிகளுக்கு எதிராக பல்வேறு பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அதே போல், கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆள்கடத்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோதச் செயல்களும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்கெட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதம் முதல் தற்போதுவரை நடைபெற்ற பாலியல் வன்கொடுமைகளில் ஒருசிலவற்றை மக்களுக்கு நினைவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதி. `யார் அந்த சார்?'

கிருஷ்ணகிரியில் 13 வயது அரசுப் பள்ளி மாணவியை மூன்று ஆசிரியர்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த நிகழ்வு! உள்ளிட்ட பாலியல் வன்கொடுமை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் மிகுந்த அச்சமும், கவலையும் அடைந்துள்ளனர். இந்த அவல நிலைக்குக் காரணமான திமுக அரசின் முதல்வர் ஸ்டாலினுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு, பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்தத் தவறிய திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும்; குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வலியுறுத்தியும், அதிமுக மாணவர் அணியின் சார்பில், பிப்.18ம் தேதி, செவ்வாய் கிழமை சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி தலைமையிலும், மாணவர் அணிச் செயலாளர் சிங்கை ராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும். நிர்வாகத் திறனற்ற திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாணவர் அணியினர் உள்ளிட்டோர் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், என்று அவர் கூறியுள்ளார்.



கன்னியாகுமரி மாவட்டம் குறளகம் ஆண்டு விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கல்வி மேம்பாட்டுக் கேந்திரம் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் கமல. செல்வராஜ் பரிசு வழங்கினார். விழாவில் குறளகம் நிறுவனர் தமிழ்குழவி தலைமை வகித்தார். எழுத்தாளர் பொன்னீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேருந்து நிலையப் பகுதிகளில் நிறுத்தப்படும் நகராட்சி குப்பை வாகனங்களில் இருந்து வீசப்படும் துர்நாற்றத்தால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் முகம் சுழித்து செல்லும் அவல நிலையும் நோய் தொற்று அபாயம் உள்ளது..

## பெரியகுளம் அருகே மும்மூர்த்தி கோயிலில் கும்பாபிஷேக விழா

பெரியகுளம் பிப்.13

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே முருகமலை ஈச்சமலை ரோட்டில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் திருமடம் திருமுறை கலாநிதி அருட் குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள்,சிவாலய திருப்பணி வித்தகர் ஆன்மீக செம்மல் சிலமலை எஜமான் ஸ்ரீ பாண்டி முனீஸ்வரர் ஆகியோரின் அருளாசியோடு அருள்மிகு ஸ்ரீவில்வேஸ்வரர் அருளால் புதியதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர், ஸ்ரீ லட்சுமி நாராயணர், ஸ்ரீ சரஸ்வதி பிரம்ம தேவர் ஆகிய மும்மூர்த்திகளின் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.





காசி, நாசரேத், சுருளி தீர்த்தம் ஆகிய புண்ணிய தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட நன்னீரை பக்தர்களுக்கு தெளித்தனர். மேலும் இந்த திருக்கோவிலில் யாகசாலை பூஜை, கோபுர அபிஷேகம், கும்ப கலசம் புறப்பாடு, புண்யாகவாசனம், மிஸ்ராங்கணம் பாலிகை பூஜை, ரஷபந்தனம், நவக்கிரஹ ஹோமம், ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், விக்ரஹம் கண் திறப்பு ஆகிய பூஜையுடன் ஓதுவார் கோகுலக்கண்ணன் பட்டர் தலைமையில் ஓதினர். மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் பக்தர்களுக்கு ஆன்மீக சொற்பொழிவும் அருளாசியையும் வழங்கினார்.

ஸ்மார்த்த சிவகுரு ஸ்ரீஜி அரிகரபுத்ர சங்கரர் மற்றும் மதுரை அழகர் கோவில் அர்ச்சகர் ஸ்ரீ ரமணா பட்டாச்சாரியார் ஆகியோர் நிகழ்ச்சியை நடத்தினர். கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஆன்மீக செம்மல் புலவர் இராசரத்தினம், ஈஸ்வரி எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர் ராஜீவ் குமார், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் கலைவாணி மதிவாணன், அரசு ஒப்பந்ததாரர் பாலா, முருகமலை குரோரைட் நிறுவனத்தினர் மற்றும் முருகமலை நகர் ஊர் பொது மக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். மும்மூர்த்தி அறக்கட்டளை திருப்பணி குழு தலைவர் கோவிந்தராஜ், செயலாளர் சரவண குமார், பொருளாளர் சீனிவாசன் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

எ. ஆர். எம் குடும்பத்தினரான பாண்டியரத்தினம் ராஜமாணிக்கம் மும்மூர்த்தி திருக்கோவில் அமைய இடம் கொடுத்து உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது. மஹா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு விழா குழுவினர் சார்பில் அன்னதானம் வழங்கினர்.

## பழனியில் தைப்பூசத்தின் முக்கிய நிகழ்வான தைப்பூசத் தேரோட்டம்

பழனி பிப்.13

பழனியில் தைப்பூசத்தின் முக்கிய நிகழ்வான தைப்பூசத் தேரோட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்து வழிபட்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தைப்பூசத்திருவிழா கடந்த 5ம்தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்த வண்ணம் உள்ளனர். பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் தைப்பூசத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று நடைபெற்றது. ஊர்க்கோவிலான பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் 12மணியளவில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி வள்ளி, தெய்வானை சமேதராக தேர்ஏறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து மாலை 4.30மணியளவில் பூஜை செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து தேர் நிலையில் இருந்து துவங்கிய தேரோட்டம் நான்கு ரதவீதிகளிலும் வலம்வந்தது. தேரில் வலம் வந்த அருள்மிகு முத்துகுமாரசாமி வள்ளி, தெய்வானையை வீடுகளில் முன்பு கோலமிட்டு வரவேற்றனர். வீடு தேடி வந்து அருள்பாலிக்கும் முருகனுக்கு தேங்காய் உடைத்து பக்தர்கள் தீபாராதனை செய்து வழிபட்டனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து திருத்தேரை இழுத்தனர்.

## பெரியகுளம் அருகே மஞ்சளாறு அணையில் அகில பாரதிய சந்நியாசிகள் சங்கம் சார்பில் தீப ஆராதனை

பெரியகுளம், பிப்.13

இந்தியா முழுவதும் நதி நீரை தூய்மைபடுத்தவும், உலக நன்மைக்காகவும் 3 ஆம் ஆண்டு மஹா கங்கா ஆரத்தி விழா தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே ஸ்ரீ மூங்கிலணை காமாட்சி அம்மன் கோவில் பகுதியில் உள்ள மஞ்சளாறு அணையில் தவத்திரு ஸ்ரீமத் சுவாமி ராமானந்தா மகராஜ் தலைமையில் நடைபெற்றது.






இந்நிகழ்விற்கு அகில பாரதீய சந்நியாசிகள் சங்க நிறுவனர் சுவாமி சிவராமனந்தா, இணைச் செயலாளர் சுவாமி ஈஸ்வரனந்தா, கைலாசபட்டி ஸ்ரீ ஜிஜி லாஅல்சித் பாபாஜி ஆஸ்ரமம் தலைவர் சரவணன், செயலாளர் ரகுபதி, சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் அப்பாத்துரை, பொருளாளர் முத்துராமலிங்கம், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் சகோதரி சித்ரா, தேவதானப்பட்டி அஜிபாய், மூங்கிலணை காமாட்சி அம்மன் கோவில் பரம்பரை பூசாரி சுந்தரலிங்கம், ஜெயராமன், வழக்கறிஞர்கள் சுசி தமிழ் பாண்டியன், பரமேஸ்வரன் உள்பட பக்தர்கள், மஞ்சளாறு அணை மற்றும் தேவதானப்பட்டி சுற்றுவட்டார பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியா முழுவதும் அகில பாரதீய சந்நியாசிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் நதி நீரை தூய்மைப்படுத்த முயற்சி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தீப ஆராதனை நிகழ்வில் பரதநாட்டியம், சிலம்பம் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தது. விழாக் குழுவின் சார்பில் பக்தர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## நாகூர் அம்மாள் உதவும் இதயங்கள் சமூக நல அறக்கட்டளை சார்பில் மனநலம் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரை மருத்துவர்களிடம் ஒப்படைப்பு

கூடுவாஞ்சேரி பிப் 13

சங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி கே.கே. நகர் பகுதியில் பல நாட்களாக பொதுமக்களுக்கு இடையூறு செய்துக் கொண்டிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரை பொதுமக்கள் புகார் அழித்ததன் அடிப்படையில் நந்திவரம் கூடுவாஞ்சேரி 27வார்டு கவுன்சிலர் லையன் ஆர்.கலைச்செல்வன் அவர்கள் உடனடியாக நந்திவரம் கூடுவாஞ்சேரி நெல்லிக்குப்பம் சாலை கோவிந்தராஜபுரத்தில் அமைந்துள்ள நாகூர் அம்மாள் உதவும் இதயங்கள் சமூக நல அறக்கட்டளையை தொடர்பு கொண்டு அவர்களிடம் இந்த நபரைப் பற்றிய தகவலை தெரிவித்தார்.




நாகூர் அம்மாள் சமூக நல அறக்கட்டளை சமூக ஆர்வலரும் நீயு ஆர்க்காடு பிரியாணி கடையின் உரிமையாளருமான ஹைதர் அலி மற்றும் சமூக ஆர்வலர் சுமதி ஆகியோர் உடனடியாக கே.கே.நகர் பிரதான சாலையில் மயங்கிய நிலையில் இருந்த அந்த ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட ஆணுக்கு முதல் உதவி செய்து அவரை ஹைதர் அவர்கள் கரங்களால் குளிக்க வைத்து அவருக்கு வேறு மாற்றுடை அணிவித்து தனது சொந்த வாகனத்தில் அவரை அழைத்துச் சென்று மனநலம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து அவரை பத்திரமாக மருத்துவர்களிடம் ஒப்படைத்தார்.

இதில் நந்திவரம் கூடுவாஞ்சேரி 27வார்டு கவுன்சிலர் லையன் ஆர்.கலைச்செல்வன் தகவல் தந்த உடனே துரித நடவடிக்கை எடுத்து அந்த ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட ஆணுக்கு உதவி செய்த நீயூ ஆர்க்காடு பிரியாணி உரிமையாளர் ஹைதர் அலி, சமூக ஆர்வலர் சுமதி, செயளாளர் லியாக்கத் அலி துனை தலைவர் சசிகுமார் அவர்களுக்கும் நாகூர் அம்மாள் உதவும் இதயங்கள் சமூக நல அறக்கட்டளைக்கும் சார்பாகவும் நந்திவரம் கூடுவாஞ்சேரி பொதுமக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொண்டார்..

## குன்னூர் அருகே உள்ள வெலிங்டனில் நூற்றாண்டு கால பழமை வாய்ந்த கோவில் கும்பாபிஷேக விழா!



குன்னூர்,பிப்13

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டனில் முருகன் கோவில் கட்டப்பட்டு 172 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நிலையில் இந்தக் கோவிலை புதுப்பித்து இந்து அறநிலை துறை சார்பில் திருப்பணி பணிகள் நடைபெற்றது.

இதில் கோவிலின் முன்புறம் விநாயகர், பைரவருக்கு புதிதாக மண்டபம், மகா மண்டபத்தின் உட்புறம் புதிய கொடிமரம், அன்னதானக் கூடம் என பல்வேறு திருப் பணி கள் நடந்தது.

தொடர்ந்து கும்பாபிஷேக ஏற்பாடுகள் கடந்த 2 நாட்களாக நடந்தது. முன்னதாக நேற்று முன்தினம் கணபதி வழிபாடு, வேதா அனுக்ஞை, புண்யாகவாசனம் வாஸ்துசாந்தி, கணபதி, மகாலட்சுமி, நவக்கிரக, சுதர்சன ஹோமங்கள், கும்பஸ்தாபனம், வேதிகார்ச்சனை, முதல் கால வேள்வி, பூர்ணாகுதி, தீபாராதனை ஆகியவை நடந்தன.

நேற்று காலை பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து காலை, 10:00 மணிக்கு அருகிலுள்ள கோதண்ட ராமர் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் பாலசுப்பிரமணியர் மற்றும் கோதண்ட ராமரை தரிசனம் செய்தனர்.

விழாவிற்கு நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, கண்டோன்மென்ட் வாரிய முதன்மை நிர்வாக அதிகாரி வினீத் பாபாசாகிப் லோட்டே, வாரிய பொறியாளர் சுரேஷ், சார் ஆட்சியர் சங்கீதா, உட்பட பல மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து வான வேடிக்கை மற்றும் அன்னதானம் ஆகியவை நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை இந்து அறநிலைய துறையினர், திருப்பணிக் குழுவினர், உபயதாரர்கள் செய்து இருந்தனர். இதனை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டல பூஜை நடைபெற உள்ளது.

## தமிழ்நாடு அறிவியல் இயக்க கல்லல் கிளை கூட்டம்! பாராட்டு விழா

கல்லல், பிப்.13

தமிழ்நாடு அறிவியல் இயக்க கல்லல் கிளை கூட்டம் கல்லலிலுள்ள கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. துளிர் இல்ல பொறுப்பாளர் நாகரத்தினம் வரவேற்புரை ஆற்றினார். கிளைத் தலைவர் தனுசு ஸ்டாலின் தலைமையேற்று அறிவியல் மனப்பான்மை பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட செயலாளர் ஆரோக்கியசாமி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சர்வதேச தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், பெண் விஞ்ஞானிகளை பற்றியும் எடுத்துரைத்தார்.








மாவட்டப் பொருளாளர் பிரபு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் முன்னெடுக்க உள்ள கிராம அறிவியல் திருவிழா, தேசிய அறிவியல் தினம், உலகத் தினங்கள் கொண்டாடுவது பற்றியும், கிளை மாநாடு நடத்துவது பற்றியும் உறுப்பினர்கள் சேர்க்கையை துரிதப்படுத்துவதன் அவசியத்தை பற்றியும் விளக்கி கூறினார். விக்ரம் சாராபாய், சர். சி. வி. ராமன், டாக்டர் முத்துலட்சுமி துளிர் இல்லங்கள் சார்பாக மாவட்ட குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் பங்குபெற்ற குழந்தை விஞ்ஞானிகள் பாராட்டப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

துளிர் திறனறிதல் தேர்வில் பங்கு பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மண்டல மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டு மாநில மாநாட்டில் தங்கள் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் இராஜகணபதி மற்றும் சரவண பிரவினுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கிளைப் பொருளாளர் சக்திவேல் நன்றி கூறினார். அறிவியல் இயக்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். செயற்குழு உறுப்பினர் விநாயகமூர்த்தி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

## குடிபோதையில் ஓட்டி வந்த நான்கு கனரக வாகனம், உட்பட 26 கனரக வாகனங்கள் மீது நடவடிக்கை



கன்னியாகுமரி பிப்.13

கன்னியாகுமரிமாவட்டத்தில் விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். இரா.ஸ்டாலின் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக மாவட்டம் முழுவதும் தொடர் வாகன சோதனை நடைபெற்று வருகிறது.

குடிபோதையில் கனரக வாகனம் ஓட்டி வந்த 04 பேர் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

மேலும் அதிக பாரத்துடன் ஏற்றி வந்த கனரக வாகனம் மற்றும் சாலைகளில் செல்லும்போது கனரக வாகனங்களில் 16 டயர்கள் பயன்படுத்த வேண்டும் என்ற உத்தரவை மீறி இயக்கப்பட்ட 21 வாகனங்கள் மீதும் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் வரும் நாட்களில் மேலும் தீவிரப்படுத்தப்படும் என எச்சரிக்கப்படுகிறது.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் மறு சீரமைக்கபட்ட கட்டண கழிவறை மற்றும் பேருந்து நிலையம் மற்றும் வடசேரி ஆம்னி பேருந்து நிலையம், புதிதாக கட்டபட்டுவரும் கட்டண கழிப்பறை ஆகிய பகுதிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் மாநகராட்சி ஆணையர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு மேற்கொண்டார்.நடைப்பெற றுவரும் பணிகளை காலதாமதமின்றி நிறைவு செய்யவும் பேருந்து நிலையத்தில் கழிவறை பகுதிகளிலும் குப்பைகள் தேங்காதவாறு அப்புறப்படுத்த வேண்டும் என அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

## போடிநாயக்கனூர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் 25வது கொடி நாள் வெள்ளி விழா! இனிப்புகள் வழங்கல்





போடி, பிப்.13

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் 25வது கொடி நாள் வெள்ளி விழாவாக கொண்டாடப்படும் வேளையில் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள தேவர் சிலை முன்பு தேமுதிக கொடியினை 12022025 புதன்கிழமை ஏற்றினர். இந்நிகழ்ச்சி போடி நகர் செயலாளர் முருகவேல் தலைமையிலும், அவைத்தலைவர்கள் இளங்கோவன், குமார், ஈஸ்வரன், ராஜா மற்றும் ஆண்டிபட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். ரத்தினவேல் பாண்டியன், ஆண்டிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பி.ராஜா, பெரியகுளம் நகர் செயலாளர் யுவராஜ் ஆகியோர்களும் தேசிய முற்போக்கு திராவிட கட்சியின் தொண்டர்களும் கலந்து கொண்டு பட்டாசுகளை வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பறக்கை அரசு உயர்நிலை பள்ளியின் 7ம் வகுப்பு மாணவன் முகமது அப்துல்லா சிலம்பு ஆட்டத்தில் இரட்டை கம்பு சுற்று போட்டியில் தொடர்ந்து 2 மணி 45 நிமிடம் சுற்றி நோபல் உலக சாதனை படைத்துள்ளார்.வெற்றி பெற்றதை தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் . மாநகராட்சி அலுவலகத்தில் சந்தித்து வெற்றி பெற்ற சான்றிதழினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.உடன் தலைமை ஆசிரியர் முருகேஷ் உடற்கல்வி ஆசிரியர் லிங்கேஸ்வரன். மண்டலத் தலைவர் ஜவஹர் ஆகியோர் உடனிருந்தனர்...



திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.



நெல்லையில் மாநகர காவல்துறை சார்பாக பொது மக்களின் புகார் மனுக்களை பெற்று விரைவில் தீர்வு கிடைக்க ஏற்பாடு செய்தனர் இம்முகாமில் 21 பேர் கலந்து கொண்டு காவல் ஆணையர் .சந்தோஷ் ஹாதிமணி அவர்களிடத்தில் பொதுமக்கள் புகார் மனுக்களை அளித்தார்கள். புகார் மனுக்கள் மீது சரியான நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு கிடைக்க வழிவகை செய்யப்படும் என காவல் ஆணையர் கூறினார்கள். இக்கூட்டத்தில் காவல் துணை ஆணையர்கள் (மேற்கு) கீதா (கிழக்கு) வினோத் சாந்தாராம் கலந்துகொண்டார்கள்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் புன்னைநகர் புனித லூர்து அன்னை தேவாலயத்திற்கு சொந்தமான கல்லறை தோட்டத்தில் உடல்களை அடக்கம் செய்ய போதிய இடம் இல்லை என்பதால் பங்கு நிர்வாகம் கூடி ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி அங்குள்ள பழைய கல்லறைகளை இடித்து மாற்றுவழி செய்து வரும் நிலையில் மற்றொரு தரப்பினர் பங்குத்தந்தை மற்றும் நிர்வாகத்திற்கு எதிராக அவரது முன்னோர்கள் அடக்கம் செய்த இடத்தில் மீண்டும் கல்லறை எழுப்பியதால் பரபரப்பு இதனால் இரு தரப்பினரையே மோதல் ஏற்படும் சூழலால் போலீசார் குவிப்புமேலும் பங்கு தந்தை மற்றும் பங்கு நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு எதிராக செயல்படுவதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையினரிடம் புகார் அளித்துள்ளனர்.

## போடிநாயக்கனூர் ஆறுபடையோன் முருகன் கோவில் தைப்பூசத் திருவிழா

தேனி.பிப்13

தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் குலாலர் பாளையம், பங்காருநாயக்கர் மேற்குத் தெரு ஜ.கா.நி. மெட்ரிக் பள்ளி எதிரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆறுபடையோன் பக்த சபை முருகன் கோவில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு க்கு பால்குடம் ஏந்தி போடி நகர் முக்கிய வீதியில் வழியாக ஊர்வலமாக சென்றனர்.

அதனைத் தொடர்ந்து மதியம் 12.30 மணிக்கு மேல் கோவில் வளாகத்தில் சிறப்பு அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தைப்பூசத் திருவிழா போடிநாயக்கனூர் ஜமீன்தார் வடமலைராஜைய பாண்டியன் தலைமையிலும் முருகேசன் அருள்செல்வி ஆகியோரின் முன்னிலையிலும் ஸ்ரீ ஆறுபடையோன் பக்த சபை முருகன் கோவில் தலைவர் . முருகன், துணைத் தலைவர் . காமாட்சி,செயலாளர் .முருகவேல், சன்னாசி துணைச் செயலாளர், பொருளாளர் தங்கம் மற்றும் நிர்வாகஸ்தர்களும் ஸ்ரீ ஆறுபடையோன் திருவாதிரை தங்கரதக்குழு பழனி பாதயாத்திரை போடி, பக்த கோடிகளும் பொது மக்களும் ஆன்மீக நண்பர்களும் தைப்பூசத் திருவிழாவில் கலந்துகொண்டு முருகனின் அருளை பெற்று சென்றனர்.



## கீழக்கோட்டை ஊராட்சியில் மனித பரிணாம வளர்ச்சியை உலகிற்கு உரைத்த சார்லஸ் டார்வின் பிறந்த தினவிழா கொண்டாட்டம்



காளையார் கோவில் பிப்.13

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சார்லஸ் டார்வின் பிறந்த தினவிழா கொண்டாட்டம் நடைபெற்றது.

ஒரு மாலுமியை விடவும் அதிக நேரம் கடலில் பயணம் செய்த விஞ்ஞானியும், உயிரினங்களின் தோற்றம் என்ற புத்தகத்தை 60 ஆயிரம் பக்கங்களுக்கு அதிகமாக எழுதியவரும், பரிணாம வளர்ச்சியின் தந்தை என அழைக்கப்படும் பிதாமகன் சார்லஸ் டார்வினின் முகமூடி அணிந்து மாணவ மாணவிகள் புகழாரம் செய்தனர். பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை யேற்றார். கணினி பயிற்றுநர் வித்யா முன்னிலை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் வரவேற்றார்.

சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி டார்வின் இயற்கை தேர்வுக் கோட்பாடு ஒவ்வொரு சூழ்நிலையிலும் இயற்கை உயிரிகளிடத்தில் அதனை நிலைநிறுத்திக்கொள்ள பல நிர்பந்தங்களை விதித்து அந்தந்த நிலைக்குத் தன்னை தகவமைத்துக்கொள்ளவும் இனம் அடுத்தக் கட்டத்துக்குப் பரிணமிக்கிறது என்பதையும் குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றால் இப்போதுள்ள குரங்குகள் ஏன் மனிதனாக மாறவில்லை? தற்பொழுது ஏன் பரிணாமங்கள் நிகழ்வதில்லை? போன்ற கேள்விகள் இன்றுவரை எழுப்பப்படுகின்றன. அறிவு தளங்களிலேயே குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற கருத்தாக்கம் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

டார்வின் அப்படி என்றும் சொல்லவில்லை. மாறாக மனிதனும் குரங்கும் ஒத்த, வேறு பொது இனத்திலிருந்து தோன்றியவை என்றே குறிப்பிட்டுள்ளது. மனிதனுக்கும் மனித குரங்குக்கும் மிகத் துல்லியமான மரபுவித்தியாசமே காணப்படுகிறது. பரிணாமம் என்பது கோடிக்கணக்கான காலச் சுழற்சிக்கு இடையே நிகழ்வது. குறிப்பிட்டு நோக்கும் அளவுக்கு நிகழக் கூடியதல்ல என்கிறார் டார்வின் என்று சிறப்புரையாற்றினார்.

கல்வி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டார்கள். மாணவ மாணவிகளுக்கு அறிவியல் வினாக்கள் கேட்க புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. ஆசிரியர் ராஜபாண்டி நன்றி கூறினார்.

## தேனியில் 40 இலட்சம் மதிப்பீட்டில் கால்பந்து மற்றும் கிரிக்கெட் மைதானங்களை திறந்து வைத்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர்

தேனி, பிப்.13

தேனியில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் மாவட்ட பெறுந்த்திட்ட வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கால்பந்து மற்றும் கிரிக்கெட் மைதானத்தினை அமைச்சர் ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்

பின்னர் விளையாட்டுப் போட்டிகளுக்கு தேவையான கால்பந்து மற்றும் கிரிக்கெட் மட்டை தேவையான பொருட்களை மாணவர்களுக்கு அமைச்சர் வழங்கினார்

தொடர்ந்து மாற்று திறனாளிகளுக்கு மூன்று சக்கர மின்சார வாகனம் மற்றும் நலத்திட்ட உதவிகளும் மாவட்ட ஆட்சியர் ஷஜீவனா முன்னிலையில் வழங்கினார்



இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷஜீவனா நாடாளுமன்ற உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் விளையாட்டு வீரர்கள்கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## குன்னூர் அருகே வளர்ச்சிப் பணிகள் நிறைவடைந்தும் திறக்கப்படாத கட்டிடங்கள்! பொதுமக்கள் அவதி

குன்னூர், பிப்.13



நீலகிரி மாவட்டம் குன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட தூதூர்மட்டம், மகாலிங்கம் காலனி,டெரேமியா, பிசிகாலனி ஆகிய பகுதிகளில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மேலூர் ஊராட்சி சார்பில் நடைபெற்ற வளர்ச்சி பணிகளுக்கு பணிகள் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் நிறைவு பெற்றும் கூட இதுவரை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்க்களுக்கு பணிக்கு உண்டான நிதி வழங்கப்படவில்லை. இதில் குறிப்பாக பிசி காலனியில் சதுப்பு நிலத்தில் சிமெண்ட் தூண்கள் அமைத்து அதன்மேல் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. இதற்காக ஊராட்சி ஒன்றியம் சார்பில் முதல் கட்டமாக 6.87 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகள் துவங்கப்பட்டது. ஆனால் இங்கு செலவான தொகை 12.48 லட்சம் ஆகும் இந்தத் தொகையை இதுவரை சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு வழங்கப்படவில்லை எனவும்,மகாலிங்கம் காலனி குடிநீர் தேவைக்காக செய்குத்து குழி மூன்று இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 2.60 லட்சம் மட்டுமே தொகை வழங்கப்பட்ட நிலையில் மீதமுள்ள 5.

27 லட்சம் ரூபாய் வழங்கப்பட வில்லை. இதேபோல் டெரேமியா பகுதியில் செயல் பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி பராமரிப்பு பணிக்காக 2.லட்சம் மதிப் பில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில், நடை பாதை பணிகளும் ரூ.4 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரை அதற்குண்டான தொகை வழங்கப்படாததால் ஒப்பந்த தாரர்கள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருவதாக புகார் கூறுகின்றனர்.

இது தொடர்பாக பலமுறை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அதிகாரிகளுக்கு பலமுறை தகவல் கொடுக்கப்பட்டுள்ள தாகவும், மேலூர் ஊராட்சி நிர்வாகத்திடமும் முறை யிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை செய்து முடித்த ஒப்பந்ததாரருக்கு உரிய தொகை வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக ஒப்பந்ததாரர்கள் தரப்பில் கூறப்படுகிறது. மக்கள் நலனுக்காக அரசு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து பணிகள் மேற்கொண்டும் கூட அதற்கு உண்டான நிதியை வழங்காததால் கழிப்பிடம் உள்ளிட்ட முக்கிய கட்டிடங்கள் இரண்டு ஆண்டுகளாகவேபூட்டி கிடக்கிறது.இதனால் மக்களும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளனர்.இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் பாதிக்கப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களும் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து முறையிட முடிவு செய்துள்ளதாக தெரி வித்துள்ளனர்.

## நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் உறை பனி பொழிவு

ஊட்டி, பிப்13



நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் நவம்பர் இறுதி வாரம் முதல் பிப்ரவரி இறுதி வரையிலோ அல்லது மார்ச் முதல் வாரம் வரை உறைபனி விழுவது வழக்கம்.

ஆனால் இந்த ஆண்டு மாத தொடக்கத்தில் மழை பொழிவு இருந்ததால் பனிக்காலம் தொடங்குவதில் கால தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த 4 நாட்களுக்கும் மேலாக உதகையில் உறைப்பனி பொழிவு அதிகரித்து காணப்படுகிறது. இதனால், மாவட்டத்தில் பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் உள்ள செடிகள் கருக துவங்கியுள்ளன.

இந்நிலையில் நேற்று காலை ஊட்டியில் கடும் உறைப்பனி பொழிவு காணப்பட்டது.

குறிப்பாக காந்தல் முக்கோணம், தலைகுந்தா, பைக்காரா, கிளன்மார்கன், சூட்டிங்மட்டம், போன்ற பகுதிகளில் உறைபனி கொட்டி கிடந்தது. இதனால், புல் மைதானங்கள் அனைத்தும் வெள்ளை கம்பளம் விரித்தார் போல வெண்மை நிறத்தில் காட்சி அளித்தது.இதேபோல் உதகையில் பயிரிடப்பட்டுள்ள மலைத் தோட்ட காய்கறிகளான கேரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் மீது உறைபனி படர்ந்து காணப்பட்டது. உறைப்பனியின் தாக்கம் காரணமாக மலைதோட்ட காய்கறிகள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும் உறை பனி தாக்கத்தால் அதிகாலையில் தோட்ட வேலைகளுக்கு செல்லும் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி மாவட்டம், தடிக்காரர்கோணம் கிறிஸ்தவ நல உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா கலந்து கொண்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

## காளையார் கோவில் அருகே உள்ள இத்திக்குடி கண்மாய் வரத்துவாரிக்கு அளித்த பட்டாவை ரத்து செய்யக்கோரி மனு

சிவகங்கை, பிப்.13

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் அருகே உள்ள இத்திக்குடி கண்மாய் வரத்துவாரிக்கு முறைகேடாக அளித்த பட்டாவை ரத்துசெய்ய வலியுறுத்தி அந்த கிராம மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புதன்கிழமை மனு அளித்தனர்.



இது தொடர்பாக இத்திக்குடி கிராம மக்கள் திரண்டு வந்து அளித்த மனு: இத்திக்குடி கிராமத்தில் 150 மேற்பட்ட விவசாய குடும்பங்கள் வசித்து வருகிறோம். இத்திக்குடி யிலுள்ள கணக்கன் கண்மாய் சுமார் 35 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த கண்மாய் மூலம் சுமார் 75 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நிலையில் அந்த கண்மாயின் உள்பகுதியில் மடை அருகே உள்ள வரத்துவாரி பகுதியில் தனிநபர் ஒருவர் ஜேசிபி மூலம் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டாராம். இதைப்பார்த்து கிராம மக்கள் சம்பந்தப்பட்ட நபரை இடைமறித்து கேட்டபோது தனக்கு வருவாய் துறையினர் கடந்த 2014 ல் பட்டா வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். இதைக் கேட்ட கிராம மக்கள் அதிர்ச்சியடைந்தோம்.

எனவே, இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்திகாளையார் கோவில் தாலுகா அலுவலகம் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்பிரச்னையில் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு தனிநபருக்கு வழங்கிய பட்டாவை ரத்து செய்ய வேண்டுமென அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்னகண்ணனூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாமில் நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்

மானாமதுரை பிப்13

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை உள்வட்டம், சின்னகண்ணனூர் கிராமத்தில், நேற்று (12.02.2025) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை, வழங்கி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, அனைத்துத்தரப்பு மக்களையும் பயன்பெறச் செய்து வருகிறார்கள். பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், அரசின் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு நேரடியாக வழங்கிடும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் ஒரு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தினை தேர்ந்தெடுத்து, அதிலுள்ள கடைக்கோடி கிராமத்திற்கு சென்று, பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்று, தகுதியுடைய பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கென ஒவ்வொரு மாதமும் மக்கள் தொடர்பு முகாம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், நேற்றைய தினம் மானாமதுரை வட்டத்திற்குட்பட்ட சின்னகண்ணனூர் கிராமத்தில் நடைபெற்று கொண்டிருக்கும், இம்மக்கள் தொடர்பு முகாமின் மூலம் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் விரிவாக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளனர்.



இம்மக்கள் தொடர்பு முகாமினை முன்னிட்டு, முன்னதாக பொதுமக்களின் தேவைகள் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பாக கோரிக்கை மனுக்கள் பெறப் பட்டு, அதில் தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, அம்மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளும், அதன் பயன்களும் வழங்கப் படவுள்ளன. நேற்றைய தினமும் இம்முகாமின் வாயிலாக பெறப்படும் கோரிக்கை மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீதும் உடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய பலன்கள் வழங்கப்படும்என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரி வித்தார்.

முன்னதாக, இம்மக்கள் தொடர்பு முகாமில் அரசின் பல்வேறு துறைகள் ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல்விளக்க கண்காட்சி யினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், 58 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 8,19,500/ மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், திருமணம் மற்றும் இயற்கை மரண உதவித்தொகை ஆகியவை களுக்கான ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 05 விவசாயிகளுக்கு ரூ.2,500/ மதிப்பீட்டிலான சிறுதானியம், கேழ்வரகு மற்றும் உயிரிஉரம் ஆகிய வேளாண் இடுபொருட் களை யும்,தோட்டக்கலைத்துறையின் சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.15,600/ மதிப்பீட்டிலான தென்னை மற்றும் எலுமிச்சை பரப்பு விரிவாக்கத்திற்கான இடுபொருட்களையும், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000/ வீதம் மொத்தம் ரூ.5,000/ மதிப்பீட்டிலான மருந்து பெட்டகங்களையும், என ஆக மொத்தம் 85 பயனாளிகளுக்கு ரூ.14,00,418/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) கார்த்திகேயன், மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் மற்றும் அனைத்து துறை அரசு முதல்நிலை அலுவலர்கள், பொதுமக்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா தலைமையில் மதுரை மண்டல அளவிலான நுகர்வோர் திருவிழா நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் .பூமிநாதன் , மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் , கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சதீஸ்குமார் மாவட்ட வழங்கல் அலுவலர் .ரவிக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161